RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt2224s1934

OPEN ACCESS

# திருமுருகாற்றுப்படையில் அறமும் வாழ்வியலும்

## இர. விஜயலட்சுமி [அ, *]

[அ] தமிழாய்வுத்துறை, ஸ்ரீமத் ஆண்டவன் கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி-620005, தமிழ்நாடு, இந்தியா

# Virtue and Life in Thirumurukatrupadai

## R. Vijayalakshmi [a, *]

[a] Department of Tamil, Srimad Andavan Arts & Science College (Autonomous), Tichirappalli-620005, Tamil Nadu, India

* Corresponding Author: vijinithisri@gmail.com

Received: 02-07-2022
Revised: 14-09-2022
Accepted: 03-10-2022
Published: 10-12-2022

Check for updates

### ABSTRACT

Every living being in the world from birth to death depend others in one way or other. A person attracts himself and those who depend on him by his moral behaviors, ethics and good deeds. The literature that travels in his life is reflected in the society and changes the society in a positive way. The literature from the Sangam period to today is an illustration of the social condition. Literature highlights the appropriate ways for a person who born as a human being to live as a human being and to develop himself as a social person. Also, when every human being lays down moral restrictions and duties for himself and strives to live in the ways prescribed by literature, this world will achieve all kinds of benefits. In this, setting up the association and developing the Tamil language is the pride for the Tamil people. No other people of other language have this kind of pride. We all know that language has been preserved. When examining Tamil anthropology through the ancient Sangam literature which proclaims the Tamil tradition and moral life, the cultural elements of the Sangam people can be seen as valuable. In this way, in Nakkeer's Thirumurukatrupadai, which is the opening song of Patuppattu, explains when the dignitaries who realize the mistake they have committed and seek forgiveness to Thirumurugan, he will remove the guilt of his servants and bless him. This article is carried out on the basis of Thirumurukatrupadai that honesty in life and maturity of not deceiving anyone, proclaiming love without anger and hatred, dealing with everyone in harmony, protecting the environment from destruction, and worshiping Murugan will prosper our lives and the lives of others.

**Keywords:** Temperance, Chastity, Business Virtue, Penance, Household Chores, Music and Goodness, Murugan Worship

## முன்னுரை

சங்கம் அமைத்துத் தமிழ் மொழி வளர்த்து வந்த பெருமை தமிழருக்குரிய தனிப் பெருமையாகும். இத்தகுபெருமை வேறு எம்மொழியினருக்கும் இல்லை. இத்தமிழ்ச்சங்கம் கால வெள்ளத்தால் முதற் சங்கம், இடைச் சங்கம், கடைச் சங்கம் என முச்சங்கமாய் புலம்பெயர்ந்தியங்கிப் பல்லாண்டுகள் தமிழ் மொழியைக் காத்து வந்துள்ளதை நாம் அனைவரும் அறிவோம். தமிழர் மரபையும், அறவாழ்வியலைப் பறைசாற்றும் பண்டைய கால சங்க இலக்கியத்தின் வழி தமிழர் மானுடவியல் ஆராயும்போது சங்ககால மக்களின் பண்பாட்டுக் கூறுகள் மதிப்புமிக்கனவாய்க் காணமுடிகின்றது. 2009 இல் சென்னை சாரதா பதிப்பகத்தால் வெளியிடப்பட்ட டாக்டர் கதிர் முருகுவின் பத்துப்பாட்டு மூலமும் உரையும் என்னும் நூலை முதன்மை நூலாகக் கொண்டு பத்துப்பாட்டின் முதன்மைத் தொடக்கக் கடவுள் வாழ்த்துப் பாடலாக அமைந்துள்ள நக்கீரரின்

திருமுருகாற்றுப்படையில் நவிலப்படும் முருகனை வழிபடும் அடியவர்களின் மனக்குற்றம் போக்கும் தன்மை, கற்பின் மேன்மை, தவத்தின் சிறப்பு, கோபத்தின் தீமை, வீடுபேறுவின் உயர்வு, குணமேம்பாடு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு அறம், முருகன் வழிபாட்டு அறம் முதலானவற்றைப் பற்றிய அறவாழ்வியலை இக்கட்டுரையில் நாம் காணலாம். மேலும், திருமுருகாற்றுப்படையில் புலனாகும் அறக்கோட்பாட்டின் அடிப்படையில் வாழ்வியல் அறத்தை ஆய்வதாயும் இக்கட்டுரை அமைகின்றது. மேலும், இவ்வாய்வின் பயன்களாய் முருகனைச் சிந்தையுருகி வழிபடும்போது மனம் எவ்வாறு பண்படுகிறது. அதற்கான வழிமுறைகள் என்ன?. என்பதும், கற்பின் மாண்பு, வாணிப அறம், நற்குணத்தின் சிறப்பு, வழிபாட்டின் இன்றியமையாமை முதலானவை பற்றியும், அறிந்து கொள்ளலாம்.

## மனக்குற்றமும் அறமும்

நாம் நமக்காகவும், பிறருக்காகவும் செய்யும் தவறினை இரண்டாகப் பகுக்கலாம். அவை,

1. 1.அறிந்து செய்யும் தவறு
2. 2.அறியாமல் செய்யும் தவறு என்பனவாகும்.

இவற்றில் முதலாம் வகையானது (அறிந்து செய்யும் தவறு) உணர்ச்சி வசப்பட்டு அதன் மனவெழுச்சியின் பாதிப்பின் காரணமாக தனக்கும் பிறருக்கும் ஏதேனும் வகையில் கண்டிப்பாகத் தீங்கு நேரும் என்பது பற்றியும் இதனால் அவமானம் நிகழும் என்பது பற்றியும் பலவாறு அறிந்திருந்தும் தவறினை மேற்கொள்வதாகும்.

இரண்டாம் வகையானது (அறியாமல் செய்யும் தவறு) உணர்ச்சிவசப்பட்டு அதன் மனவெழுச்சியின் பாதிப்பின் காரணமாக தனக்கும் பிறருக்கும் ஏதேனும் வகையில் கண்டிப்பாகத் தீங்குநேரும் என்பது பற்றியும் இதனால் அவமான நிகழும் என்பது பற்றியும் எந்தவித சிந்தனையுமின்றி, ஆராயாமல் தவறினை மேற்கொள்வதாகும்.

மேற்கண்ட இருவகை தவறினையும் மேற்கொண்டாலும் உண்மையை உணர்ந்து மனதளவில் மன்னிப்பு தேடும் மாண்புடையவர்கள் திருமுருகனை நாடும் அடியவர்களின் மனக்குற்றத்தை அவன் நீக்கி அருள் புரிவான் என்பதை

'உறுநர்த் தாங்கிய மதனுடைநோன்றாள்'

என்னும் அடியில் காணலாம் (Kathir Murugu, 2009). அடியவர்களின் மனக்குற்றம் மட்டும் நீக்குவதோடு அல்லாமல் அவர்கள் மேலும் தவறினை மேற்கொள்ளாமல் இருக்கும் மனஉறுதியையும் வழங்குகிறான் என்பதும், பிறருக்கு தீங்குகள் செய்தல் தவறு என்று எண்ணும் அறஉணர்வினையும் முருகன் தன் அடியவர்களுக்கு ஏற்படுத்துகிறான் என்பதும் இதன்வழி புலனாகிறது.

## கற்பும் அறவாழ்வும்

தமிழர்களின் பண்பாட்டு வாழ்வியலில் கற்பு என்னும் நெறி மிகவும் தலையாய ஒன்றாகும். இக்கற்பினைத் திருமுருகாற்றுப்படையில் நக்கீரரும் நம் முன்னோர்கள் போன்று வழிமொழிகின்றார் என்பதை

'மறுவில் கற்பின் வாணுதல் கணவன்'

'மாசின் மகளிரொடு மறுவின்றி விளங்கக்'

'தாவில் கொள்கை மடந்தையொடுசி ன்னாள்'

என்னும் அடிகளில் காணலாம் (Kathir Murugu, 2009).

மேற்கண்ட அடிகளில் "மறுவில் கற்பின், மாசின் மகளிரொடு, தாவில் கொள்கை மடந்தையொடு" என்னும் சொற்களெல்லாம் குற்றமில்லாத கற்புடைமகளிர், குற்றமில்லாத அறத்தையே கற்பாகக் கொண்ட மகளிர் என்பவற்றையே குறிக்கப்படுகின்றன.

கற்பு பற்றி வள்ளுவரும் அறத்தை வலியுறுத்தும் அறத்துப்பாலில் வாழும் காலம் முழுமைக்கும் வாழ்க்கைத் துணையாக வருபவருக்கான கற்பு பற்றி உணர்த்தும் அதிகாரமான வாழ்க்கைத் துணைநலம் என்னும் அதிகாரத்தில்

'பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பெண்ணும்

திண்மை உண்டாகப் பெறின்'

என்னும் குறளில் பெண்களுக்கான கற்பின் முக்கியத்துவத்தை உரைப்பதைக் காணமுடிகிறது (Sivagyanam, 2009).

சமுதாயத்தில் ஆணுக்கான நீதியும் பெண்ணுக்கான நீதியும் இரண்டும் வேறுவேறு நிலைகளில் காலங்காலமாகப் பயணப்பட்டுக் கொண்டிருந்தாலும் பெண்களுக்கான கற்பின் மீதான பார்வை இலக்கியத்திலும் சமுதாயத்திலும் பெரிதும் கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாகக் காணக் கிடைக்கின்றது. இதன் வழி திருமுருகாற்றுப்படையிலும் கற்பின் அறம் பேண வேண்டும் என்பது புலனாகிறது.

## வாணிபத்தில் அறம்

வாணிபத்தின் அறம் பற்றி

'கொள்வதூஉ மிகைகொளாது கொடுப்பதூஉங் குறைகொடாது

பல்பண்டம் பகர்ந்து வீசும்'

என்னும் அடிகளில் காணலாம் (Kathir Murugu, 2009).

பண்டமாற்று வணிகத்தில் வாங்கிய பொருளுக்குக் கொடுக்கப்படும் பொருள் குறைவாகக் கொடுக்கப்படாமலும், கொடுக்கப்பட்ட பொருளைவிட அதிகமாகப் பொருள் வாங்கப்படாமலும் செய்யப்படும் வாணிபமே சிறந்தது என மேற்கண்ட பட்டினப்பாலை பாடல் அடிகள் வாணிப அறத்தைக் கற்பிப்பதை நாம் அறிவோம்.

எவ்விதக் குற்றமுமின்றி வாணிபம் நடக்கும் கடைத்தெருவை மக்கள் என்றுமே நாடிச்செல்வர். இத்தகைய ஏமாற்றாத கடைத்தெருவில் திருமகள் வீற்றிருப்பாள் என்பதை திருமுருகாற்றுப்படையும்

'திரு வீற்றிருந்த தீதுதீர் நியமத்து'

என்னும் அடியில் வாணிப அறத்தையும் பயனையும் எடுத்துரைப்பதைக் காணலாம் (Kathir Murugu, 2009).

## தவமும் அறமும்

தவம் மேற்கொள்ளும்போது ஐம்புலன் ஆசைகளை அடக்கவேண்டும் என்பதை வள்ளுவரும்

'சென்ற இடத்தால் செலவிடாதீ தொரீஇ

நன்றின்பால் உய்ப்ப தறிவு'

என்னும் குறளில் உரைப்பதை நாம் காணலாம் (Sivagyanam, 2009). திருமுருகாற்றுப்படையிலும்

'தாவில் கொள்கைத் தந்தொழில் முடிமார்'

என்னும் அடியில் குற்றமில்லாமல் மேற்கொள்ளும் தவஅறத்தை முன்னிறுத்துவதைக் காணலாம் (Kathir Murugu, 2009).

## வீடுபேறும் அறமும்

காலங்காலமாக உண்மை, நேர்மை, நீதி, முறைமை, அறம், தர்மம், வாய்மை முதலானவற்றைப் பின்பற்றி வாழ்பவர்களுக்கு என்றாவது ஓர்நாள் பலன் கிடைக்கும் என்ற நம்பிக்கை விதையை நம் சான்றோர்கள் தங்கள் வழித்தோன்றல்களுக்கு எப்போதும் கூறிக்கொண்டுதான் வருகின்றனர். இதற்கு 'வீடுபேறு' என்ற பெயரும் வைத்துள்ளனர். திருமுருகாற்றுப்படையிலும் 'வீடுபேறு' என்னும் சொல் 'விண்செலல் மரபு' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

வீடுபேற்று உலகத்திற்குச் செல்லும் வழிமுறைகளை மேற்கொள்ளும் அடியவர்களுக்கு வழிகாட்டும் முருகனின் ஒருகை என்பதை

'விண்செலல் மரபின் ஐயர்க் கேந்தியது'

என்னும் அடியில் காணலாம் (Kathir Murugu, 2009).

கோபமும் வெறுப்பும்

கோபம் கொள்பவர்கள் தன்னையும் தன்னைச் சார்ந்தவர்களையும் அழித்துக் கொள்கின்றனர். தன்னையும் தற்சார்ந்தவர்களையும் காக்கவிரும்பினால் கோபத்தை விட்டொழிதல் நலம் என்னும் அறத் தத்துவத்தை உணர்ந்தவர்கள் பற்றி

'கடுஞ்சினங் கடிந்த காட்சியர் இடும்பை'

என்னும் அடியில் காணலாம் (Sivagyanam, 2009).

யாரிடமும் வெறுப்புகொள்ளாத முனிவர்களின் குணம் பற்றி

'யாவதும் அறியா இயல்பினர் மேவரத்

துனியில் காட்சி முனிவர் முற்புகப்'

என்னும் அடிகளில் காணலாம் (Kathir Murugu, 2009).

## இசையும் நற்குணமும்

நற்குணம் உடையவர்கள் அனைவரைம் நேசிப்பர். அதுமட்டுமில்லாமல் நற்குணம் உடையவர்களை அனைவரும் நேசிப்பர். ஒருவர் தன்னை நற்குணமுடையவராய் மாற்றிக்கொள்வதற்கான வழிமுறைமையை திருமுருகாற்றுப்படையில் காணலாம். இன்றைய நவீன மனோதத்துவ மருத்துவத்தில் இசையினால் மனநோய் குணப்படுத்தும் இம்முறைக்கு 'மியூசிக்தெரபி' என்று பெயரிட்டு அழைக்கின்றனர். ஆனால், திருமுருகாற்றுப்படையில் இசையினால் தம் குணங்கள் பண்பட்டு நல்லியல்பாய் மாறிய கந்தர்வர்களைப் பற்றி

'நல்லியாழ் நவின்ற நயனுடை நெஞ்சின்

மென்மொழி மேவலர் இன்னரம் புளர'

என்னும் அடிகளில் காணலாம் (Kathir Murugu, 2009).

## அறமும் அறுந்தொழிலும்

நல்லனவற்றை ஓதுவதும், ஓதுவித்தலும், நல்லனவற்றை வேட்டலும், வேட்பித்தலும், இயலாதவர்களுக்கு தம்மால் இயன்றதை ஈதல் முற்படுதலும், தர்மத்தை ஏற்றலுமாகிய அறுந்தொழில் அறக்கொள்கையினைப் பற்றியும் அவற்றை மேற்கொள்பவர்களின் செயல்பாடுகள் பற்றியும் திருமுருகாற்றுப்படையில்

'இருமூன் றெய்திய இயல்பினின் வழாஅது

இருவர்ச் சுட்டியதால் பல்வேறு தொல்குடி

அறுநான்கிரட்டிசஇளமைநல்லியாண்டு

ஆறினிற் கழிப்பிய அறன்நவில் கொள்கை

மூன்று வகைக்குறித்த முத்தீச் செல்வத்து

இரு பிறப்பாளர் பொழுத றிந்துநுவல'

என்னும் அடிகளில் காணலாம் (Kathir Murugu, 2009).

## ஒற்றுமையும் அறமும்

பசுங்கொடியினையும் நறைக்காயினையும் சேர்த்துக்கட்டி, மணம்வீசும் நறுஞ்சந்தனத்தை மார்பினை உடையவரும் ஏனை உயிர்களிடத்து இரக்கம் கொள்ளாத கானவர்கள், மூங்கில் குழாயில் தேனை ஊற்றி அதனை நன்றாகப் பக்குவப்படுத்திப் பெறப்பட்ட தேறலை, தன் மலைநாட்டில் தன்னோடு வாழும் உறவினர்களுடன் உண்டு மகிழ்ந்து தொண்டகப் பறையை அடித்து ஓசையை எழுப்பி, கூட்டத்துடன் ஆரவாரங் கொண்டு தாளமுறைக் கேற்ப ஒற்றுமையுடன் அனைவரும் ஆடிக் கொண்டிருந்ததை

'கொடுந்தொழில் வல்விற் கொலைஇய கானவர்

நீடமை விளைந்த தேக்கள் தேறல்

குன்றகச் சிறுகுடிக் கிளையுடன் மகிழ்ந்து

தோண்டகச் சிறுபறைக் குரவை அயர'

என்னும் அடிகளில் காணலாம் (Kathir Murugu, 2009).

பண்டுதொட்டு நம் முன்னோர்கள் ஒற்றுமையைப் பறைசாற்றும் பல நன்மொழிகளை அறக்கோட்பாடாய்

'கூடி வாழ்ந்தால் கோடி நன்மை'

'தனிமரம் தோப்பாகாது'

'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு'

'ஒற்றுமையே வலிமை'

'ஊருடன் பகைக்கின் வேறுடன் கெடும்'

'குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை'

என வழங்கியுள்ளனர் (Kathir Murugu, 2009).

புறநானூறில் கோவூர்கிழாரும் போரைத் தவிர்த்து ஒற்றுமையால் நாட்டைச் சீர்படுத்த வேண்டும் என்பதை

'நின்ன கண்ணியு மார்மிடைந் தன்றே

ஒருவீர் தோற்பினுந் தோற்பதுங் குடியே'

என்னும் அடிகளில் உணர்த்துகிறார் (Avvai Duraisamy, 1968).

இவை அனைத்தும் சாதிபிரிவினைகளற்று, எவ்வித ஏற்றத் தாழ்வுகளுமில்லாமலும், துன்பமென வரும்போது அனைவரும் கைகொடுத்து உதவும் மனப்பான்மையைப் பெறவேண்டும். மகிழ்ச்சியாக ஒற்றுமையுடன் வாழவேண்டும் என்ற வாழ்வியல் அறத்தை வலியுறுத்தும் விதமாக உள்ளது.

## சுற்றுச்சூழல் அறமும் முருகனின் உறைவிடமும்

இயற்கையோடு வாழ்ந்து பழகிய மனிதன் அவன் காணும் இயற்கை ஒவ்வொன்றிலும் தான்வணங்கும் கடவுளைக் காணமுயற்சித்துள்ளான். இதுசுற்றுச்சூழல் அழியாமல் பாதுகாக்கும் மனப்பான்மையை வெளிப்படுத்துவதை உணரலாம்.

அடர்ந்த காட்டிலும், வண்ண வண்ணமாகப் பூத்துக்குலுங்கும் மலர்ச்சோலைகளிலும், நீர்வளம், நிலவளம் பொருந்திய தாவரங்களிலும், மலையிருந்து ஊற்றெடுத்துப் பெருகியோடும் ஆற்றிலும், மழைநீராய்த் தேங்கிய குளத்தினும், நான்கு தெரு கூடும் சதுக்கத்திலும், மூன்று தெருக்கள் கூடும் சந்தியிலும், புதிய மலர்கள் மலர்ந்திருக்கும் கடம்ப மரத்திலும் என இயற்கை சார்ந்த இடத்தில் முருகன் வீற்றிருப்பதை,

"காடுங் காவுங் கவின்பெறு துருத்தியும்

யாறுங் குளனும் வேறுபல் வைப்பும்

சதுக்கமுஞ் சந்தியும் புதுப்பூங் கடம்பும்"

என்னும் அடிகளில் காணலாம் (Kathir Murugu, 2009).

## முருகனை வழிபடும் முறைமையும் அறமும்

குறிஞ்சி நிலக்காவலனாகிய முருகனை எப்போது காண நேர்ந்தாலும் முகத்தால் இனிமையாகப் பார்த்து, வாயினால் மனதளவில் எவ்விதக் குற்றமின்றிப் புகழ்ந்து வாழ்த்திக் கையைத் தலைமேல் குவித்துத் தொழுது வணங்கி, அவன் திருப்பாதத்தில் விழுந்து வணங்க வேண்டும் என்னும் வழிபாட்டு அறத்தை,

"ஆண்டா ண்டாயினும் ஆகக் காண்டக

முந்துநீ கண்டுழி முகனமர்ந்து ஏத்திக்

கைதொழூஉப் பரவிக் காலுற வணங்கி"

என்னும் அடிகளில் காணலாம் (Kathir Murugu, 2009).

## முடிவுரை

உலகில் பிறப்பு முதல் இறப்பு வரையிலான எல்லா உயிரினமும் பிறவற்றைச் சார்ந்து வாழும் தன்மை உடையது. இதில் மனிதனாகப்பட்டவன் தன்னையும் தன்னைச் சார்ந்தவர்களையும் அறம், ஈகை, ஒழுக்கம் ஆகிய நெறிகளில் ஈர்த்து தான் வாழும் நிலையை உயர்த்திக் கொள்கிறான். அவன் வாழ்வில் பயணிக்கும் இலக்கியம் என்பது சமூகத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாய் சமூகத்தை நன்முறையில் மாற்றுகிறது. சங்ககாலம் முதல் இன்று வரையுள்ள இலக்கியங்கள் சமூக நிலையை எடுத்துக்காட்டுவதாய் அமைகின்றது. மனிதனாகப் பிறந்தவன் மனிதனாய் வாழ்வதற்கும், சமூக இயைபுடையவனாய் தன்னை மென்மேலும் வளர்த்துக்கொள்வதற்கும் உரிய வழி வகைகளை இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றது. மேலும், ஒவ்வொரு மனிதனும் தனக்கென்று அறக்கோட்பாட்டுக் கட்டுப்பாடுகளையும் கடமைகளையும் வகுத்துக்கொண்டு இலக்கியம் கூறும் வழிமுறைகளில் வாழ்வாங்கு வாழ முற்படும் போது இவ்வுலகம் எல்லா வகை நன்மைகளையும் அடைகின்றது. அவ்வகையில் திருமுருகாற்றுப்படையின் வழி செய்த தவறை உணர்ந்து மனதளவில் மன்னிப்புத் தேடும் மாண்புடையவர்கள் திருமுருகனை நாடும்போது அவன் அடியவர்களின் மனக்குற்றத்தை நீக்கி அருள்புரிவான். வாழ்வில் நேர்மையும் யாரையும் ஏமாற்றாத பக்குவ நிலையும், கோபம், வெறுப்பு முதலானவற்றைத் தவிர்த்து அன்பைப் பறைசாற்றி, யாவருடனும் ஒற்றுமையுடன் பழகி,

சுற்றுச்சூழலை அழியாமல் காத்து, முருகனை முறைமையுடன் வழிபட்டால் நம்வாழ்வும் பிறர்வாழ்வும் செழிக்கும் என்னும் அறக்கருத்தை இதுவரை நாம் விரிவாகக் கண்டோம்.

## References

Avvai Duraisamy, Pillai, (1968) Puranaanuru, Kazhaga Veeliyeedu, Chennai, India.

Kathir Murugu, (2009) Pathupattu Mollamum Uraiyum, Saradha Pathippagam, Chennai, India.

Sivagyanam, V. (2009) Thirukkural, Vijaya Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License